பட்டுள்ளார்கள். உடனடியாக அந்த ஆலைகளையெல்லாம் மூடிவிட்டால் தொழில் பாதிக்கும், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அப்போது நம்முடைய மாண்புமிகு கந்தசாமி அவர்கள்கூட பரிந்துரை செய்கிற நிலைமையெல்லாம் ஏற்படும். எனவே இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு விரைந்து அவர்கள் 'காமன் ஃப்ளுயன்ட் டிரீட்மென்ட் பிளான்ட்' அமைக்க வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மீண்டும் அது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது அந்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்ற பணியில் அவர்களோடு சேர்ந்து, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்த ஆலை அதிபர்கள் அவர்களோடு சேர்ந்து இணைப்பாக செயல்பட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) மதுரை டி.வி.எஸ். ரப்பர் ஆலை கழிவுப் பொருட்கள் மற்றும் புகை சுற்றுப் புறச்சூழலைப் பாதிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் மு. காளிராஜன், மற்றும் திரு. ஓ. எஸ். அமர்நாத் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் மு. காளிராஜன் இருக்கையில் இல்லை. திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் உள்ள டி.வி.எஸ். ரப்பர் ஆலையிலிருந்து வெளியே வரும் கழிவுப் பொருட்கள் மற்றும் புகை, அப்பகுதியின் சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதித்துள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ரப்பர் பிரிவு மற்றும் திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டயர் சர்வீஸ் பிரிவு ஆகிய தொழிற்சாலைகள் மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், கோச்சடை கிராமத்தில் அமைந்துள்ளது.

1994 ஏப்ரல் 30] [திரு. ம. சின்னசாமி]

1. திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ரீஸ் லிமிடெட், ரப்பர் பிரிவு:-

இந்தத் தொழிற்சாலை கீழ்க்கண்டவற்றைத் தயாரிக்கின்றது:-

(1) கோமல் பிளாக் டயர்	மாதத்திற்கு 2,800 மெட்ரிக் டன்
(2) இயந்திர ரப்பர் பொருள்	
(3) உலோகம் சம்பந்தப்பட்டவற்றிற்கான ரப்பர்	மாதத்திற்கு 730 மெட்ரிக் டன்
(4) ரப்பர் கவர் மற்றும் பை	
(5) ரப்பர் பேக்	மாதத்திற்கு 60 மெட்ரிக் டன்

கார்பன் பிளாக், ரப்பர், ஸிங்க் ஆக்ஸைடு, சல்பர், பில்லர்ஸ், பாண்டிங் ஏஜெண்ட்ஸ் மற்றும் ஸ்டீரிக் அமிலம் ஆகியன மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. தயாரிக்கும் முறை பின்வருமாறு: மூலப்பொருட்களை அரைத்தல், அச்சில் வார்த்தல், வல்கனைசிங் செய்தல், ஆறவைத்தல், குளிர்வித்தல், சீர்செய்தல் ஆகியனவாகும்.

இந்தத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 3.5 கிலோ லிட்டர் வடிகால் கழிவுநிரையும், 15 கிலோ லிட்டர் உணவக கழிவுநீரையும் 35 கிலோ லிட்டர் தொழிற்சாலை கழிவுநீரையும் வெளியேற்றுகின்றது. வடிகால் கழிவுநீரை சுத்திகரிக்க இந்தத் தொழிற்சாலை நச்சுத் தடைத்தொட்டியை அமைத்துள்ளது. அதிலிருந்து நிரம்பி வழியும் கழிவுநீர் உணவக கழிவுநீருடன் கலக்கப்பட்டு, சேகரிக்கும் தொட்டி, காற்றேற்று தொட்டி, மணல் வடிகட்டி மூலமாக சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீர் தொழிற்சாலையின் சொந்த நிலத்தில் தோட்ட விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. கொதிகலனிலிருந்து வரும் கழிவுநீர் மற்றும் குளிர்விக்கப்பயன்படுத்திய நீர் ஆகியன சேகரிக்கும் தொட்டி, தெளிவிப்பான மற்றும் மணல் வடிகட்டி ஆகியவை மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட இந்தக் கழிவுநீர் மாநகராட்சியின் திறந்தவெளி வடிகாலில் வெளியேற்றப்படுகிறது. 3-3-1994 அன்று வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரின் மாதிரிகள் ஆகியன சேகரிக்கப்பட்டன. அவற்றின் பகுப்பாய்வு அறிக்கையின்படி மாசுக்களின் அளவு கீழே கண்டவாறு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளைவிடக்குறைவாக இருந்தது அறியப்பட்டது.

அளவுகள்	பகுப்பாய்வு அறிக்கையின்படியான அளவு.		வாரியம் நிர்ணயித்துள்ள அளவு.
	வடிகால் கழிவுநீர்.	தொழிற்சாலைக் கழிவு நீர்.	
(1)	(2)	(3)	(4)
பி. எச் (PH)	8.31	8.4	5.5 முதல் 9 வரை
மொத்தமிதக்கும் திடப்பொருட்கள்	30 மி.கி/லிட்டர்	10 மி.கி/லிட்டர்	100 மி.கி./லி
மொத்த கரைந்துள்ள திடப்பொருட்கள்	1,848 மி.கி/லிட்டர்	1,134 மி.கி/லிட்டர்	2,100 மி.கி/லி
பயோகெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட்	22 மி.கி/லிட்டர்	3 மி.கி/லிட்டர்	30 மி.கி/லி
கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட்	103 மி.கி/லிட்டர்	138 மி.கி/லிட்டர்	250 மி.கி/லி

இந்தத் தொழிற்சாலையில் கீழ்க்கண்ட பிரிவுகளிலிருந்து வாயுக் கழிவுகள் வெளியேறுகின்றன:-

1.	நிலக்கரியில் இயங்கும் கொதிகலன் (மணிக்கு 5 டன்)	1
2.	எண்ணெயில் இயங்கும் கொதிகலன் (மணிக்கு 2 டன் ஒவ்வொன்றுக்கும்)	2
3.	டீசல் ஜெனரேட்டர் (மின்ஆக்சி)	
	160 கெ.வி.ஏ	2
	300 கெ.வி.ஏ	1
	120 கெ.வி.ஏ	3
	110 கெ.வி.ஏ	1

மணிக்கு 5 டன் அளவான கொதிகலனுக்கு 18 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கியும் மணிக்கு 2 டன் அளவான கொதிகலனுக்கு 12 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கியும், மின் ஆக்கி ஒவ்வொன்றுடனும் 3.6 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கியும் பொருத்தப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30] [திரு. ம. சின்னசாமி]

19-8-1993 அன்று சுற்றுப்புற காற்றின் தர நிர்ணயம் செய்வதற்கான ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வறிக்கையின்படி மாசுக்களின் அளவு கீழ்க்கண்டவாறு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளைவிட குறைவாக இருந்தது அறியப்பட்டது.

	ஆய்வறிக்கையின்படி கண்டறியப்பட்ட அளவு	வாரியம் நிர்ணயித்துள்ள அளவு
காற்றில் மிதக்கும் நுண்துகள்கள்	93-186 மி.கி/க.மீ	200 மி.கி./க.மீ.
சல்பர் டை ஆக்ஸைடு	8.6 மி.கி/க.மீ	80 மி.கி./க.மீ.
ஆக்ஸைட்ஸ் ஆஃப் நைட்ரஜன்	9-59 மி.கி/க.மீ	80 மி.கி./க.மீ.

இந்தத் தொழிற்சாலைக்கு நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ் 31-3-1994 முடிய வாரியத்தின் இசைவாணை வழங்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ரீஸ் லிமிடெட், டயர் சர்வீஸ் பிரிவு:-

இந்நிறுவனமானது மாதம் ஒன்றுக்கு 1,415 ரப்பர் சக்கரத்தைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் நாளொன்றுக்கு 0.5 கி.லிட்டர் வடிகால் கழிவுநிரையும், 0.5 கிலோலிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரையும் வெளியேற்றுகின்றது. இத்தொழிற்சாலையின் செய்முறைகள் வருமாறு: பழைய டயர்களை ஆய்வுக்கு உட்படுத்துதல், மெருகேற்றுதல், பழுதுபார்த்தல், பூச்சிடுதல், மாதிரி அச்சிலிட்டு வார்த்தல், குளிரவைத்தல் பின்னர் வெளி அனுப்புதல்.

வடிகால் கழிவு நீரானது நச்சுத்தடைத் தொட்டி வழியாக தடைநீக்கம் செய்யப்பட்டு, வழிந்தோடும் கழிவுநீரானது, ரப்பர் பிரிவில் உள்ள வடிகால் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுகின்றது. தொழிற்சாலைக் கழிவு நீரானது, சூரிய ஒளியினால் ஆவியாக்கப்படும் கொதிகலத்தட்டத்தினுள் வெளியேற்றப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலையானது ஆரம்ப காலத்தில் ரப்பர் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்தி வந்தது. அருகிலுள்ள குடியிருப்புகளில்

[திரு. ம. சின்னசாமி] [1994 ஏப்ரல் 30

இருந்து காற்று மாசு குறித்த புகார்கள் பெறப்பட்டமையால், இந்நிறுவனமானது வாரியத்தால், ரப்பர் கழிவுகளை எரிபொருட்களாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் தகுந்த காற்று மாசுத்தடுப்பு சாதனங்களை பொருத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி இந்நிறுவனம் பழைய ரப்பர் கழிவுகளை எரிபொருட்களாகப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டது. இந்நிறுவனமானது தனது 29-3-1994 நாளைய கடிதத்தில், தூசிகளின் கழிவினைக் கட்டுப்படுத்த நீரினைச் சிறு துகள்களாக தெளிக்கும் அமைபினை (Sprinkler System) அமைக்கவிருப்பதாகவும், இது குறித்த வேலைகள் மே மாதம், முதல் வாரத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்துள்ளது.

இத்தொழிற்சாலையின் நடவடிக்கைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முனைப்புடன் கண்காணித்து வருகின்றது.

முற்பகல் 11-50

திரு. ஓ. எஸ். அமர்நாத்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் தெற்கு வட்டம் கோச்சடை கிராமத்தில் அமைந்துள்ள ரப்பர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கோமல் பிளாக் டயர் இயந்திர ரப்பர் பொருட்கள் மற்றும் உலோகம் சம்பந்தப்பட்ட ரப்பர் பொருட்கள் ரப்பர் பேக் போன்றவை தயாரித்து வருகின்றன. இதிலே நாள் ஒன்றுக்கு 3.5 கிலோ லிட்டர் வடிகால் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது என்றும் 15 கிலோ லிட்டர் உணவு கழிவுநீர் வெளியேற்றப்படுவதாகவும் 35 கிலோலிட்டர் தொழிற்சாலை கழிவுநீர் வெளியேற்றப்படுவதாகவும் இங்கே விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாசு கட்டுப்பாடு வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட காற்றில் மிதக்கும் இந்த துகள்கள் 200 கன மீட்டர் என்றும் இங்கே அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே இந்த டி.வி.எஸ். ரப்பர் தொழிற்சாலையிலிருந்து அந்த ஆய்வின்படி 186 கன மீட்டர் காற்றில் மிதக்கும் துகள்கள் வெளியேற்றப்படுகின்றது. ஆகவே கிட்டத்தட்ட 14 கனமீட்டர் தான் அரசு சொன்ன வாரியம் அனுமதித்திருந்த அளவுக்கும் இதற்கும் வித்தியாசப்படுகிறது. எனவே, அந்தப் பகுதி ரப்பர் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கும்போது ஒரு தொழிற்சாலைப் பகுதியாக மக்கள் இல்லாத பகுதியாகத்தான் இருந்தது. ஆனால் இன்றைக்கு அது குடியிருப்புப் பகுதியாக மாறி, அதிகமான வீடுகள் உள்ள குடியிருப்புப் பகுதியாக இருக்கிறது; இந்த நேரத்திலே காற்றிலே மிதக்கும் துகள்கள் அந்த வீடுகளில் உள்ள சுவற்றிலோ அல்லது வீடுகளில் இருக்கும் பொருட்களிலோ படிந்து விடுகிறது. ஒரு வாகனத்தை அல்லது ஒரு காரை

1994 ஏப்ரல் 30] [திரு. ஓ. எஸ். அமர்நாத்]

இரவு நேரத்தில் வெளியே நிறுத்திவிட்டு மறுநாள் காலையில் பார்த்தால் அந்த காரினுடைய கலர் மாறுகின்ற அளவுக்கு இந்த காற்றில் மிதக்கும் துகள்கள் அந்த காரிலே படிகின்றன. பள்ளிப் பிள்ளைகள் கூட மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனாலே நிலத்தடியில் உள்ள நீரின் தன்மையும் மாறுகிறது. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து 186 கன மீட்டர் அளவுக்கு வரும் காற்றில் மிதக்கும் துகள்களை அகற்றுகின்ற அளவுக்கு வேறு ஏதெனும் மாற்று வழியினை அந்த நிர்வாகம் அமைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-3-1994 அன்று மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் மாதிரி எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதில் அதில் மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவை விட மாசுகளின் அளவு குறைவாக இருக்கிறது என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதைப்போலவே 19-8-1993 அன்று சுற்றுப்புற காற்றின் தர நிர்ணயம் செய்வதற்கான ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையின்படி மாசுகளின் அளவு வாரியம் நிர்ணயித்துள்ள அளவைவிட குறைவாக இருந்தது என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது மதுரையிலே இருக்கின்ற அந்த வாரியத்தினுடைய அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். ஆகவே நான் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அதிகாரிகளுக்கு சென்னையிலே தலைமையகத்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு ஒரு அறிவுரை வழங்கியிருக்கிறேன். உடனடியாக தலைமையகத்திலிருந்து சென்று மறு ஆய்வு செய்து மறு பகுப்பாய்வு செய்து அதைத் துல்லியமாக கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். அப்படி செய்கின்றபோது அதனுடைய உண்மையான அறிக்கை வரும். அப்பொழுதும் மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணித்துள்ள அளவுக்கு அதிகமாக இருந்தால் அந்த ஆலையின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: தலைவர் அவர்களே, ஆரம்ப காலத்திலே இந்த ரப்பர் பேக்டரியிலே இருக்கின்ற கழிவுகளைத்தான் எரிபொருளாகப் பயன்படுத்தி வந்தார்கள். பின்னால் அந்தப் பகுதியினுடைய, குடியிருப்புப் பகுதியினுடைய மக்கள் வந்து புகார் செய்ததை வைத்துக் கொண்டு அங்கே மாசு தடுப்பினுடைய சாதனம் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டும் இன்றைக்கும் அது பயன்படுத்தாத நிலைதான் இருக்கிறது. அது வெளியிடுகின்ற அந்த காற்றில் மிதக்கும் துகள்கள்

[திரு. ஓ. எஸ். அமர்நாத்] [1994 ஏப்ரல் 30

அந்தப் பகுதியிலே பெரும் கொடிய நோய்களுக்குக் காரணமாகவும் மற்றும் நிலத்தடி நீர் மற்றும் எல்லா இயற்கை சாதனங்களுக்கும் இடையூறாக இருப்பதைக் கணக்கில் வைத்துக்கொண்டு அங்கே ஸ்ப்ரிங்க்ளர் சிஸ்டம் என்ற ஒரு சிஸ்டம் அமைக்க இருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்த ஸ்பிரிங்க்ளர் ஸிஸ்டத்திற்கு, அரசுக்கு நிர்வாகம் மனு போட்டு அதை கேட்டிருக்கிறதா? அந்த ஸ்ப்ரிங்க்ளர் ஸிஸ்டம் பணி மே மாதத்தில் முடிவடைவதாகச் சொல்லியிருந்தார்கள். மே மாதம் முடிவாகும் தருவாயில் இருந்தாலும் முடியவில்லை என்றாலும் அதற்கு, ஸ்பிரிங்க்ளர் ஸிஸ்டம் வேலை முடியும்வரை தற்காலிகமாக ஏதேனும் நடவடிக்கையை நிர்வாகம் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல இந்தத் தொழிற் சாலையானது ஆரம்ப காலத்தில் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்தி வந்தது. அருகிலுள்ள குடியிருப்புகளிலிருந்து காற்று மாசு குறித்து புகார் பெறப்பட்ட காரணத்தால் இந்த நிறுவனமானது ரப்பர் கழிவுகளை எரிபொருட்களாகப் பயன்படுத்தக்கூடாது என்றும், தகுந்த காற்று மாசு தடுப்பு சாதனங்களைப் பொருத்துமாறும் வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி இந்த நிறுவனமானது பழைய ரப்பர் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டது. இந்த நிறுவனம் தனது 29-3-1994 தேதியிட்ட கடிதத்தில் தூசிகளின் கழிவுகளைக் கட்டுப்படுத்த நீரினை சிறு துகள்களாகத் தெளிக்கும் அமைப்பினை—அதாவது ஸ்பிரிங்க்ளர் சிஸ்டம் அமைக்க இருப்பதாகவும் இது குறித்து வேலைகள் மே மாதம் முதல் வாரத்தில் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது நாம் மே மாதத்தில் நாளை முதல் மே மாதத்தில்—இருக்கப்போகிறோம். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அதை முடிக்காவிட்டால் அந்த ஆலைக்கு ரெனீவல் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.